ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂමානது

අංක 2171/2 - 2020 අප්‍රේල් මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.04.16

*2171/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அதே அட்டவணையின் II ஆம் நிரலில் உள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை, 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 03 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2019.05.21 ஆந் திகதிய 2124/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் உலர்ந்த திராட்சை (எச். எஸ். குறியீட்டு இலக்கம் 0806.20), 2019.09.30 ஆந் திகதிய 2143/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் புதிய திராட்சைப் பழங்கள் (எச். எஸ். குறியீட்டு இலக்கம் 0806.10), 2019.11.07 ஆந் திகதிய 2148/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உலர்ந்த தோடம்பழங்கள், பியர்ஸ், பிற செர்ரி பழங்கள் மற்றும் சிலோஸ் (எச். எஸ். குறியீட்டு இலக்கங்கள் 0805.10.20, 0808.30, 0809.29 மற்றும் 0809.40) மற்றும் 2020.02.01 ஆந் திகதிய 2160/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக புதிய தோடம்பழங்கள் மற்றும் புதிய அப்பிள் (எச். எஸ். குறியீட்டு இலக்கம் 0805.10.10 மற்றும் 0808.10) சம்பந்தமாக வெளியிடப்பட்ட உத்தரவுகள் 2020, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, ஏப்பிறல் 16.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | எச். எஸ். தலைப்பு | எச். எஸ். குறியீடு | விவரணம் | |
| 1 | 08.05 | 0805.10.10 | தோடம்பழங்கள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 120.00 |
| 2 | | 0805.10.20 | தோடம்பழங்கள் - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| 3 | | 0805.22.10 | கிளமென்ரைன்கள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 120.00 |
| 4 | | 0805.22.20 | கிளமென்ரைன்கள் - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| 5 | | 0805.29.10 | பிற - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 120.00 |
| 6 | | 0805.29.20 | பிற - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |
| 7 | | 0805.40.10 | திராட்சைப்பழங்கள், போமிலோஸ்கள் அடங்கலாக - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 285.00 |
| 8 | | 0805.40.20 | திராட்சைப்பழங்கள், போமிலோஸ்கள் அடங்கலாக - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 300.00 |
| 9 | | 0805.50.10 | செம்மஞ்சள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 300.00 |
| 10 | | 0805.50.20 | செம்மஞ்சள் - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 375.00 |
| 11 | | 0805.90.10 | பிற - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 300.00 |
| 12 | | 0805.90.20 | பிற - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 375.00 |
| | | | | |
| 13 | 08.06 | 0806.10 | திராட்சைப் பழங்கள் - புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 165.00 |
| 14 | | 0806.20 | திராட்சைப் பழங்கள் - உலர்த்தியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 290.00 |
| | | | | |
| 15 | 08.08 | 0808.10 | அப்பிள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 90.00 |
| 16 | | 0808.30 | பியர்ஸ் பழங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 220.00 |
| 17 | | 0808.40 | குவின்ஸஸ் பழங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 300.00 |
| | | | | |
| 18 | 08.09 | 0809.10 | அப்றிக்கொட்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 350.00 |
| 19 | | 0809.21 | புளிப்பான செறிப் பழங்கள் (புறூனஸ் செறாசஸ்) | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 330.00 |
| 20 | | 0809.29 | பிற - செர்ரி பழங்கள் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 315.00 |
| 21 | | 0809.30 | பீச்சுகள், நெக்டாரீன்கள் உட்பட | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 310.00 |
| 22 | | 0809.40 | முந்திரிகை வற்றலும் சிலோஸும் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 250.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.